சுற்றுலா வாரியத்தில் எண்ணமிருப்பதாக நான் அறிகிறேன். அந்த எண்ணம் அடுத்த ஆண்டில் நிறைவேறும் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த எண்ணம் கைகூடும் என்பதாகத் தெரிவித்துக்கொள்கிறேன் என்கிறீர்களா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அந்த எண்ணம் கைகூடும் என்பதாக நினைக்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, ஒவ்வொரு சுற்றுலா மாளிகையிலும் எத்தனை அறைகள் கட்டப்படுகின்றன? சுற்றுலா மாளிகைகளில் 4 சூட்ஸ், 5 சூட்ஸ் என்று ஏதாவது வரையறுக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, ஒருவர் தங்குவதற்கான அறைகள், இருவர் தங்குவதற்கான அறைகள், ஒரு குடும்பமாகப் போகின்றவர்கள் தங்குவதற்குக் குறைந்த வாடகையிலேயுள்ள அறைகள் என்று பரவலாக ஒரு 10, 12 படுக்கைகள் என்று 50 பேர்கள் தங்கக்கூடிய முறையிலே முதலிலே கட்டிடங்கள் கட்டப்படுகின்றன. அதற்குமேல் நிலைமைகள் அபிவிருத்தியடைந்தால் அபிவிருத்தி செய்யப் படுகிறது.

Madras-Hosur State Transport buses

* 424 *Q.*—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether there are proposals with the Government to run State Transport Buses from Madras to Hosur and Madurai to Hosur ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : There is heavy traffic from Madras to Hosur and that is the only Highway road that leads people from other places in our State to Mysore State. I hear that a bus from Madras to Hosur was decided to be started from the 3rd of this month. May I know exactly what were the orders of the Government?

1972 மார்ச் 10]

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, our officers of the Government have recently entered into negotiations with the officers of the Government of Mysore and as a tentative conclusion they have agreed to certain routes to be plied between Madras and Bangalore. In view of that, there is no point in once again running an express bus service from Madras to Hosur. But the formal concurrence of the Mysore Government is still awaited. On receipt of the concurrence, we will be able to ply express buses from Madras to Bangalore.

நகர்ப் பேருந்துகள்

* 425 வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நகர மன்றங்களின் வருவாயைப் பெருக்கிக் கொள்ள வழிவகை செய்யும் வகையில் நகர எல்லைக்குள் ஓடும் பேருந்துகளை (Town Buses) நகரமன்றங்களே ஏற்று நடத்த திட்டம் ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இன்றைக்கு நகரசபை களில் வருவாய் கம்மியாக இருக்கிறதே. அப்படி இருக்கக்கூடிய நகரசபைகளிலாவது ஓடுகின்ற டவுன் பஸ்களை நகரசபைகளிடம் ஒப்படைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, பொதுவாக நகரப் பேருந்துகள் வழித்தடங்களை நடத்துவதில் லாபம் வருவதில்லை, நஷ்டம்தான் வருகிறது என்பது உலக நகரங்களிலுள்ள அனுபவம். இந்தச் சூழ்நிலையில் ஏற்கனவேயே நிதி ஆதாரமற்ற நகரசபைகளுக்கு மேலும் இந்தப் பேருந்துகளை நடத்துகின்ற வாய்ப்புகளைக் கொடுப்பதன்மூலம் எந்த அளவிற்கு அந்த நகரசபைகள் நிலைக்கும், நீடிக்கும் என்பது எனக்குத் தெரியவில்லை. அதுமட்டுமல்ல, நாம் அதற்கான தனி வாரியங்கள், கழகங்கள் ஏற்படுத்துவதன்மூலம்தான் பேங்குகளிலே நிதியுதவி பெற முடிகின்றது. அரசாங்கமே நிதி ஆதாரங்களைத் திரட்ட இருக்கின்ற கஷ்ட நிலையிலே அவைகளைத் தனிக் கம்பெனிகளாக வைத்து நிதி ஆதாரத்தை வைத்து நடத்த வேண்டியதாய்